ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2458/13 - 2025 ඔක්තෝබර් මස 13 වැනි සඳුදා - 2025.10.13
2458/13 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ மற்றும் 70இ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 94112 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும், கொழும்பு 04, பொன்சேக்கா இடம், 03 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதும் கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட 2025, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட சான்றிதழின் கீழிருந்து சொல்லப்பட்ட ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட், ஈசொப்ட் யுனி (பிறைவேட்) லிமிடெட் என கூட்டிணைக்கப்பட்டிருக்கின்றதுமான ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2019, செத்தெம்பர் 03 ஆந் திகதிய 2139/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, "ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிடெட்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, சொல்லப்பட்ட கட்டளையில் எங்கெல்லாம் அச்சொற்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் "ஈசொப்ட் யுனி (பிறைவேட்) லிமிடெட்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் மற்றும் மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின் நியதிகளில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணங்களின் "ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்)

103 - PG 7286 - 283 (2025/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

லிமிடெட்" என்னும் ஒவ்வொரு குறிப்பீடும் "ஈசொப்ட் யுனி (பிறைவேட்) லிமிடெட்டின்" குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டுமென இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

மேலும் 2019, செத்தெம்பர் 03 ஆந் திகதிய 2139/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் அதன் மீது வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவங்களைப் பின்பற்றி இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் சொல்லப்பட்ட கொழும்பு சர்வதேச கப்பல்துறை மற்றும் பொறியியற் கல்லூரி (பிறைவேட்) லிமிடெட்டினால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது புரியப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி எல்லா நோக்கங்களுக்காகவும் ஈசொப்ட் யுனி (பிறைவேட்) லிமிடெட்டினால் வலிதுடையவாறு பிரயோகிக்கப்பட்டதும் புரியப்பட்டதுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, ஒற்றோபர் 08.

EOG 10 - 0137